Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள்: 04 விலை ரூபா: 4-50

# ஈழநாதம்

THE EELANAATHAM PEOPLES DAILY மக்கள் தினசரி

நாதம்: 02 மார்ச் (14 - 03 - 1991) வியாழக்கிழமை ஓசை 24

## தொய்வுநோய் ஊசிக்கு கொழும்பில் தடை

(கொழும்பு)

றாமெற்றிக் ஆஸ்துமா என்ற தொய்வு நோய்க்குப் பாவிக்கப்படும் ஊசிமருந்து பாவனைக்குக் கொழும்பு பெரிய ஆஸ்பத்திரியில் தடை விதிக்கப்பட்டுள்ளது, பெனிஸ்தயின், பென்சலின் என்றழைக்கப்படும் ஊசி மருந்து வழமையான றாமெற்றிக் ஆஸ்துமா நோயாளிக்குத்தான் ஏற்றப்படுகிறது. கொழும்பு பெரிய ஆஸ்பத்திரியில் வெளிநோயாளர் (4 ஆம் பக்கம் பார்க்க)

# இந்திய மக்களவை நேற்று ஜனாதிபதியால் கலைப்பு

## யூன் 5க்குள் புதிய மக்களவை தெரியபணிப்பு

(டில்லி)

இந்திய மக்களவையான லோக் சபா நேற்று நண்பகல் கலைக்கப்பட்டதாக இந்திய ஜனாதிபதி மாளிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன. மேலும் யூன் மாதம் ஐந்தாம் திகதிக்குள் புதிய மக்களவை தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் எனவும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று மாநிலங்கள் அவை அலுவலகளை முடித்துக்கொண்டு ஒத்திவைக்கப்பட்ட சற்று நேரத்திற் கெல்லாம் ஜனாதிபதியின் இந்த அறிவிப்பு வெளியானது.

இந்திய அரசியலமைப்பின் 85வது பிரிவின் 2ஆம் சரத்தின் அடிப்படையில இந்திய அவையான லோக்சபா நேற்று கலைக்கப்பட்டதாக குடியரசுத் தலைவர் உத்தரவிட்டிருப்பதாக ராஷ்டிரபதி பவன் செய்திக்குறிப்பில் கூறப்பட்டது. அந்தச் செய்திக்குறிப்பு மேலும் யூன் மாதம் 5ஆம் திகதியன்றோ அதற்கு முன்பாகவோ புதிய மக்களவை அமைக்கப்படவேண்டும் என்று குடியரசுத்தலைவர் உத்தரவிட்டிருக்கிறார் எனவும் இது தொடர்பான அதிகார பூர்வ அறிவிப்பு விரைவில் வெளிவரும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரு. சந்திரசேகர் ஏற்கனவே ராஜினாமாச் செய்துவிட்டு தேர்தல் நடத்த சிபார்சு செய்துள்ளமையாலும், வேறு எந்த அரசியல் கட்சி (4 ஆம் பக்கம் பார்க்க)

## சந்திரசேகரின் இராஜினாமா முன்கூட்டியே திட்டமிடப்பட்டது

- ராஜீவ்

பிரதமர் சந்திரசேகரின் ராஜினாமா முன் கூட்டியே நன்கு திட்டமிடப்பட்ட ஒரு ஏற்பாடு என இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவர் ராஜீவ் காந்தி கூறியுள்ளார். எதிர்க் கட்சிகள் - சபாநாயகர் - திரு. சந்திரசேகர் ஆகியோர்களுக்கிடையே நடத்துள்ள கூட்டான ஒரு யோசனையில்அவர்கள் இதனைநடத்தியுள்ளனர். ஜனதா தளத்திற்கும், ஜனதா தளம் எஸ்சுக்கும் நாட்டில் எதிர்நோக்கப்படும்பிரச்சினைகள் குறித்து தெளிவான நீண் (4ஆம் பக்கம் பார்க்க)

## மக்கள் அவை கலைப்பு தலைவர்களின் கருத்துக்கள்

பாராளுமன்றக் கலைப்பு மிகச் சரியான நடவடிக்கை என்று பாட்னா ராஜ்பவனில் செய்தியாளரிடம் பேசிய பிரதமர் சந்திரசேகரர் கூறியுள்ளார். மேலும் ஒரு கேள்விக்கு பதிலளித்த அவர் பாராளுமன்ற நடவடிக்கைகளை நடத்த இயலாமல் போனதன் விளைவாகவே தேர்தல் நடத்த சிபாரிசு செய்ய வேண்டியதாயிற்று எனக் குறிப்பிட்டார்.

நாங்கள் அதை வரவேற்கிறோம். பிரதமர் ராஜினாமா செய்த அன்றிலிருந்தே நாம் இதை கோரி வருகிறோம், (4ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு இல்லாதோர் பாகிஸ்தான் செல்லலாம்

- சிம் ரஞ்சித் சிங் மான்

(அமிர்தசரஸ்)

இந்தியநாட்டில் பாதுகாப்பு இல்லை என்று கருதும் சீக்கியர்கள் அண்டையில் உள்ள பாகிஸ்தானுக்குச் செல்லலாம் எனச் சீக்கியர்களின் முக்கிய அரசியல் கட்சியான சிரோன்மணி குருத்துவாராவின் தலைவர் சிம் ரஞ்சித் சிங் மான் கூறியுள்ளார். செய்தியாளரிடம் அவர் மேலும் பேசுகையில் இந்தியாவில் உள்ள அமெரிக்கத் தூதுவருக்கும், அமெரிக்க அதிபர் ஜோர்ஜ்புஷ்ஷுக்கும் ஆதரவு கோரிக் கடிதம் எழுதப்போவதாகத்தெரிவித்தார்.

## இந்து சமுத்திர பிராந்திய நாடுகள் அந்நியர் ஊடுருவலை தடுக்க ஒத்துழைக்க வேண்டும்

சங்கர் தயாள் சர்மா

(மொரிசியஸ்)

இந்து சமுத்திர பிராந்தியத்தில் அந்நிய சக்திகளின் ஊடுருவலை தடுப்பதற்கு அந்தப் பிராந்தியத்தில் உள்ள நாடுகள் ஒத்துழைக்க வேண்டுமென இந்திய துணை ஜனாதி (4ஆம் பக்கம் பார்க்க)

## மறுமலர்ச்சிக் கழக 11-வது நிறைவு நாள்

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் மறுமலர்ச்சிக் கழகம் எதிர்வரும் சனிக்கிழமை (4 ஆம் பக்கம் பார்க்க)

## பாலியல்வன்முறை; படுகொலை வீடுகளில் கொள்ளை

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள கும்புறுப்பிட்டியில் சிறிலங்கா இராணுவத்தினரும், முஸ்லிம் ஊர்காவற் படையினரும் இணைந்து தமிழ்ப் பொதுமக்களினது வீடுகளில் புகுந்து அங்கிருந்த இரு பெண்கள் உட்பட ஐந்து தமிழ் பொதுமக்களைக் கத்தியல் குத்திக் கொடூரமாகக் கொலை செய்த சம்பவம்பற்றிய செய்தி கடந்த செவ்வாய் வெளியான ஈழநாதத்தில் வெளிவந்தது தெரிந்ததே.

இச்சம்பவத்தில் கொலையுண்ட இரு பெண்களையும் படுகொலை செய்யுமுன்பு இராணுவத்தினரும், முஸ்லிம் ஊர்காவற்படையினரும் கொடூரமான முறையில் இவர்களைப் பாலியல் வன்முறைக்குள்ளாக்கியபின்பே கத்தியால் வெட்டிக் கொலை செய்துள்ளனர் எனவும், கொலையுண்ட பொதுமக்களின் வீடுகளினுள் இருந்த பெறுமதியான நகைகளையும் பணத்தையும் இவர்கள் கொள்ளையடித்துச் சென்றுள்ளதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன

## தாண்டிக்குள முகாமில் இருந்து முன்னேற முயன்ற இராணுவம் இழப்புக்களுடன் முகாம் திருப்பியது

(வவுனியா)

வவுனியா தாண்டிக்குளம் இராணுவ முகாமிலிருந்து வெளியேறிய இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட எதிர்த் தாக்குதலால் பலத்த இழப்புக்களுடன் பின்வாங்கிச் சென்றனர். பின்வாங்கிச்செல்லும்போது நான்குவீடுகளைத் தீயிட்டுக்கொளுத்தியுள்ளனர்.

நேற்றுக்காலை எட்டுமணியளவில் வவுனியா - தாண்டிக்குளம் இராணுவ முகாமில் இருந்து வெளியேறிய சிறிலங்கா இராணுவத்தினருக் (4ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

### வர்ணன்

(யாழ்ப்பாணம்)

கந்தளாய்க் குளத்தடியில் கடந்த திங்கட்கிழமை நண்பகல் பன்னிரெண்டு மணியளவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதவில் வர்ணன் (இளிவெட்டி, மூதூர்) என்ற போராளி வீர மரணமடைந்துள்ளார். இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## விசேட படி

(கொழும்பு)

தூர இடங்களில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு விசேட படிப் பணம், மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களின் பங்குக வரவு செலவுத்திட்டத் (4ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் கண்ணிவெடி மூன்று இராணுவம் பலி

(கொழும்பு)

வவுனியா வடக்குப் பகுதியில் நடந்த கண்ணி வெடித் தாக்குதலில் மூன்று இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் பலர் படுகாயமடைந்தனர். இவ்வாறு அரச அதிகாரிகளை மேற்கோள்காட்டி நேற்றிரவு பி.பி.ஸி. அறிவித்தது. பாதுகாப்புப்படையினர் புலிகளின் முகாம்களைத் தேடிச் செல்ல முற்பட்டபோது இச்சம்பவம் நடந்ததாகவும் தெரிவிக்கப் பட்டது.

## ஒருவர் கரை சேர்ந்தார்; மற்றவரைக் காணவில்லை

(செ. த. மை)

கட்டுமரத்தில் மீன்பிடிக்கச் சென்ற இரு குடும்பஸ்தர்கள் கடற்படையினரின் படகைக் கண்டு கடலில் பாய்ந்தனராம் இதில் ஒருவர் நீந்திக் கரை சேர்ந்தார்; மற்றவர் நிலை இதுவரை தெரியவில்லை.

நேற்று முன்தினம் இரவு பத்துமணியளவில் பொலிகண்டியைச் சேர்ந்த சு. ஆனந்தமயில் (வயது 46, ஆறு பிள்ளைகளின் தந்தை) என்பவரும், க. கண்ணன் (வயது 27 ஒரு பிள்ளையின் தந்தை) (4ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். மாவட்டத்திற்கு 48 ஆசிரியர்கள் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திற்கு எதிர்வரும் மே மாதம் முதல் சுமார் 48 ஆசிரியர்கள் இடமாற்றம் பெற்று வருகின்றனர்.

இந்தஆசிரியர்கள் இதுவரை காலமும் வெளி மாவட்டங்களில் கடமை புரிந்து வந்தனர், இவர்களின் பெயர்ப் பட்டியல் யாழ். கல்வித் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப் பட்டிருக்கின்றது. இந்த ஆசிரியர்கள் இம்மாவட்டத்தில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவும் பாடசாலைகளுக்கு நியமிக்கப்படவிருக்கின்றனர். (க)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

## மகாபொல கொடுப்பனவு

3ஆம், 4ஆம் தவணைப் பண
மேலதிக கொடுப்பனவும்
(தை / மாசி 1991)
5ஆம், 6ஆம் தவணைப் பணமும்
(பங்குனி / சித்திரை 1991)

மேற்படி கொடுப்பனவு பின்வரும் மாணவர்களுக்கு கீழ்வரும் அட்டவணைப்படி செய்யப்படும்.

3ஆம், 4ஆம் வருடம்

| | | |
|---|---|---|
| கலைப் பிரிவு | 13-03-1991 | பிற்பகல் 1-30 — 3-00 |
| வர்த்தகப் பிரிவு | 15-03-1991 | |
| வியாபார நிர்வாகப் பிரிவு | 18-03-1991 | |

3ஆம், 4ஆம் வருடம்

| | | |
|---|---|---|
| உயிரியல் விஞ்ஞானப் பிரிவு | 13-03-1991 | முற்பகல் 9 00 — 12-00 |
| பௌதிக விஞ்ஞானப் பிரிவு | 14-03-1991 | |
| மருததுவ பீடம் 5ஆம் வருட மருத்துவ பீடம் | 15-03-1991 | |

கொடுப்பனவின்போது சமர்ப்பிக்கப்பட வேண்டியவை!
1. பல்கலைக்கழக மாணவர் அடையாள அட்டை
2. ரூபா 2-00 பெறுமதியான முத்திரை

— பதிவாளர்

(B-2138)



## கம்பியூட்டர் கல்வி

Diploma in Data Processing
And Computer Programming
In Basic Language

ஆரம்பம்/ 15- 3- 1991 — 9. 00 a. m
(திங்கள், புதன், வெள்ளி வகுப்புகள்)
16 3- 1991 — 9.00 a m
(சனி, ஞாயிறு வகுப்புகள்)

O/L படித்த இருபாலாரும் சேரலாம்.
சேரும் போது செலுத்த வேண்டியது
500/- மட்டுமே

மேலதிக விபரங்களுக்கு:

UNIKCO
COMPUTER CENTRE
NO. 37, Clock Tower Road,
JAFFNA.

(வெலிங்டன் சந்திக்கு வடக்குப் பக்கமாக உள்ள மேல்மாடி)

(B-2132)


**விளம்பரம்**

### அன்பளிப்பு

எமது நூலகத்தில் நூல்கள் இரவல் கொடுக்கும் பிரிவை ஆரம்பிக்கவுள்ளதால் சிறந்த நூல்களை மனமார்ந்து அன்பளிப்புச் செய்யுமாறு மக்களை அன்புடன் கோருகின்றோம். V.K. காந்தன், தலைவர், மாவீரர் நினைவு நூலகம் 'ஆலடி' புங்குடுதீவு

(R-1182)

### ஒட்லி மண்டபத்தில் காத்தவராயன்

(நல்லூர்)

யாழ்ப்பாணக் கல்லூரி உயர்தர வர்த்தக மாணவர் மன்ற ஆதரவில் யாழ் நாட்டார் வழக்கியல் கழகம் வழங்கும் காத்தவராயன் இசை நாடகம் யாழ்ப்பாணக் கல்லூரி ஒட்லி மண்டபத்தில் எதிர்வரும் 18ஆம் திகதி பி.ப. 2 மணியளவில் நடைபெறும். இந் நாடகத்தை கலாநிதி இ. பாலசுந்தரம் நெறியாள்கை செய்துள்ளார்.

### நிவாரணக் கொடுப்பனவுகள்

(சுன்னாகம்)

மீளக் குடியமர்தல் 2 ஆம் கட்ட நிவாரணம் ரூபா 1000/- உற்பத்தி மானியம் ரூபா 4000/- ஆகியவற்றை இதுவரை பெறாதவர்களுக்கு சுன்னாகம் மக்கள் வங்கிக் கிளைக்குரிய பட்டியலின் படி, மேற்படி கொடுப்பனவுகள் சுன்னாகம் மக்கள் வங்கிக்கிளையினால் எதிர்வரும் 16 ஆம் 17 ஆம் திகதிகளில் வழங்கப்படவுள்ளன. உரும்பராய்,குப்பிளான், சுன்னாகம், புன்னாலைக் கட்டுவன் ஆகிய கி. சே பிரிவுகளுக்கு 16ஆம் திகதி சனிக்கிழமையும் தாவடி, உடுவில் சங்குவேலி, இணுவில் கந்தரோடை கி. சே. பிரிவுகளுக்கு மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் வழங்கப்படும்.

கொடுப்பனவுக்குரியவர்கள் குடும்ப பதிவு அட்டை,கி.சே. வழங்கப்படும் கொடுப்பனவு அட்டை, தேசிய அடையாள அட்டை, ரூபா 2/- முத்திரை ஆகியவற்றோடு சமூகந்தந்து நிவாரணத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

## நினைவு கூருகின்றோம்

### மார்ச் 14



கப்டன்
**வாதவூரன்**
(தம்பையா யோகேஸ்வரன்- உருத்திரபுரம், கிளிநொச்சி)



**லெப்.சாள்ஸ்**
(ஞானசேகரன் ஞானசொரூபன்-காரைநகர்)

1985ஆம் ஆண்டு மூளாயில் நடந்த இராணுவ முற்றுகையின் போது வீரமரணமடைந்த

❋ பாண்டியன் (செபமாலை நிக்கலஸ்-வட்டக்கண்டல்)

இதே ஆண்டு வீரமரணமடைந்த

❋ கிட்ணன் (S. கிருஷ்ணபிள்ளை -மூதூர்)

1986ஆம் ஆண்டு வீரமரணமடைந்த

❋ பரமேஸ் (பரமேஸ்வரன் - கல்விச்சை, வடமுனை)

1988ஆம் ஆண்டு சுழிபுரத்தில் இந்தியப்படையினருடனான மோதலின் போது சயனைட் உட்கொண்டு வீரமரணமடைந்த

அம்மான் (வினாசித்தம்பி சிவகுமாரன் - சுழிபுரம்)

இதே முற்றுகையின் போது தன்னைத்தானே சுட்டு வீரமரணமடைந்த

லெப் குலம் (மயில்வாகனம் முரளி கிருஷ்ணன்-சுழிபுரம்)

இதே ஆண்டு கண்ணிமுறிப்பில் இந்தியப்படையினரின் முற்றுகையின் போது ஏற்பட்ட மோதலின் பின் காயமடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு வீர மரணமடைந்த

கப்டன் வாதவூரன் (த. யோகேஸ்வரன் - கிளிநொச்சி)

இதே ஆண்டு வீரமரணமடைந்த

ஜேக்கப் (தி. ஜெயகுமார் - கிளிநொச்சி)

இதே ஆண்டு காரைநகர் வலந்தலையில் இந்தியப் படையினரின் சுற்றிவளைப்பின் போது வீரமரணமடைந்த

முஸ்தபா (செபமாலை செபஸ்தியாம்பிள்ளை-நெடுந்தீவு)
பரமேஸ் (க. பரமேஸ்வரன் - காரைநகர்)

இதே ஆண்டு கோண்டாவிலில் இந்தியப்படையினரின் சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரமரணமடைந்த

கோண்டாவில் பிரதேசப்பொறுப்பாளர்
2ஆம் லெப் சாந்தன் (தி. சாந்தன் - கோண்டாவில்)
லெப்.சாள்ஸ் (ஞா. ஞானசொரூபன் - காரைநகர்)
பிறேம் (தங்கராசா பிறேமதாஸ் - கோண்டாவில்)

இதே ஆண்டு அரியாலையில் இந்தியப்படையினருடனான மோதலில் வீரமரணமடைந்த


நவநீதன் (நவரத்தினம் நவநீதன் - அரியாலை)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

❋ மேற்குறிப்பிடப்பட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவர்.

— விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

(B-2135)



## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தமிழினத்தின் தாயகத்தை
மீட்டிடவே சபதமிட்டு
பாடசாலை கல்வியதை துறந்து நீ
போர்க்களத்தில் வீரனாய்

வெள்ளைக் கொடி காட்டி
வேங்கைதனைக் காட்டி
இலையொரு யுத்தமென
இந்தியமே கூறிவிட்டு
குற்றேவல் புரிந்தனையோ — எம்
குல விளக்கைக் கொன்றனையோ

**வீரவேங்கை பிரதாப்**
(தங்கராசா பிரேமதாஸ் - கோண்டாவில்)

வீரஜனனம் 19- 01- 1971

வீரமரணம் 14 03- 1989

(இந்தியப்படையினரின் சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரமரணம்)

—பெற்றோர், உறவினர், நண்பர்கள்
கோண்டாவில் வடக்கு ம கி மு. ச.

(B-2134)

### சிந்தனைக்கு

தொலைவில் இருக்கும் கடமைக்காக, அருகில் இருக்கும் கடமையை நீ புறக்கணிக்கக் கூடாது.

— மகாத்மா காந்தி

ஈழநாதம்

61, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம், 14-03-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 023-2839 நிர்வாகபீடம்: 3308
த.பெ.எண் 05

# பொறுப்பிலிருந்து நழுவும் கல்விப் பணிப்பாளர்

"வடக்கு கிழக்கு மாகாணப் பகுதியில் நிலவிய கலவர நிலைமை காரணமாக க.பொ.த. (உயர்தர) 1990 க்கு விண்ணப்பிக்க முடியாதிருந்த பாடசாலை, தனிப்பட்ட பரீட்சார்த்திகள் 1991 மார்ச் 15 ஆம் திகதிக்கு முன்னதாகத் தமது விண்ணப்பங்களை கொழும்பு பரீட்சைத் திணைக்களத்திற்கு நேரடியாக அனுப்பி வைக்கலாம் அல்லது பிராந்தியக் கல்விப் பணிப்பாளரிடம் நேரடியாக ஒப்படைக்கலாம்."

இத்தகவலை பரீட்சை ஆணையாளர் ஆர்தர்வெதமுல்ல தெரிவித்ததாக கடந்த வாரத்தில் சிறிலங்கா வானொலி அறிவித்தது. அத்தோடு கொழும்புப் பத்திரிகைகளும், யாழ்ப்பாணப் பத்திரிகைகளும் இது தொடர்பாகச் செய்தியும் வெளியிட்டிருந்தன. கொழும்புப் பத்திரிகைகளில்-குறிப்பாக ஏரிக்கரைப் பத்திரிகைகளில்-பரீட்சை ஆணையாளர் விளம்பரமும் கொடுத்தார்.

இவை யாவும், கடந்த வாரத்தின் ஆரம்பத்தில் நிகழ்ந்தவை. இந்நிலையில் நேற்று முன்தினம் எமது நிருபரிடம் ஏப்ரல் இருபத்திரெண்டாம் திகதி ஆரம்பமாக உள்ள உயர்தரப் பரீட்சைக்கு மாவட்ட கல்விப் பணிப்பாளரிடம் விண்ணப்பம் கொடுக்கலாம் என்று வெளிவந்த செய்திகளுக்குத் தாம் முழுப் பொறுப்பும் ஏற்கமுடியாதுஎன யாழ். வட்டக் கல்விப்பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார்.

கல்விப் பணிப்பாளரின் இந்த அறிவிப்பானது இருக்க இடமின்றி, சிக்க எண்ணெய் இன்றி எவ்வளவோ இன்னல்களுக்கும் சிரமங்களுக்கும் மத்தியில் கல்வி கற்றுக்கொண்டிருக்கும் மாணவர்களைக் குழப்பத்தில் ஆழ்த்தும் நடவடிக்கை என்பதோடு கல்விப் பணிப்பாளரின் பொறுப்பற்ற செயலுமாகும்.

கல்விப் பணிப்பாளர் தனக்கு சுற்று நிருபம் வரவில்லைஎன காரணம் தெரிவிக்கலாம். ஆனால் பத்திரிகைகளிலும், வானொலியிலும், ஒரு திணைக்களத்தின் பேரிலோ, அல்லது ஒரு ஆணையாளரின் பேரிலோ தவறான செய்திகளையும், விளம்பரத்தையும் வெளியிட முடியுமா? அதேவேளை கல்விப் பணிப்பாளர் யாழ்ப்பாணப் பத்திரிகைகள் கேட்பாரற்று இவ்வாறான செய்திகள் வெளியிட முடியுமெனக் கருதினும் கொழும்புப் பத்திரிகைகள் அவ்வாறு செய்தி வெளியிடும் என எவ்வாறு அவரால் கருத முடியும்?

இவ்விடயம் தொடர்பாக கொழும்புப் பத்திரிகைகளில் செய்திகளும் விளம்பரங்களும் இம்மாதம் நான்காம், ஐந்தாம், ஆறாம் திகதிகளிலேயே வெளிவந்துவிட்டன. அதேவேளை, இச்செய்திகளைத் தான் பார்க்கவில்லை என கல்விப் பணிப்பாளர் 'நக்கீரனைப்' புரட்டலாம். ஆனால் கல்விப் பணிப்பாளர் தமது கடமையைச் செய்த இராஜாங்க அமைச்சருக்கு அனுப்பிய பாராட்டுக் கடிதங்கள் தொடர்பாக கொழும்புப் பத்திரிகைகளில் வெளிவரும் செய்திகளையும் அவர் பார்க்காமல் இருக்க முடியுமா?

வடக்கு கிழக்கு மாகாணங்களின் விசேட பரீட்சை தொடர்பான கருத்தரங்கு கடந்த ஒன்பதாம் திகதி கொழும்பில் நடைபெற்றது. இந்தக் கருத்தரங்கிற்கு இம்மாகாணங்களிலுள்ள சகல கல்விப்பணிப்பாளருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. இந்தக் கருத்தரங்கிற்கு செல்லும் கல்விப் பணிப்பாளர்கள் பரீட்சைக்குத் தோற்றவிருந்த மாணவர்களின் விண்ணப்பங்களையும் எடுத்து வருவார்கள் எனவும் எதிர்பார்க்கப்பட்டது. இந்த எதிர்பார்ப்பிற்கு போக்குவரத்து நெருக்கடியே காரணமாகவிருந்தது.

ஆனால், யாழ் மாவட்டக்கல்விப் பணிப்பாளர் இக் கலந்துரையாடலுக்குச் செல்லவில்லை. இங்கு கல்விப் பணிப்பாளருக்கு தனிப்பட்ட வேலைகள் இருந்திருக்கலாம். இதை நாங்கள் குறை கூறவில்லை. ஆனால் இக்கலந்துரையாடலில் பரீட்சைகள் தொடர்பான முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்படவிருந்தன என்பது மட்டும் உண்மை. இந்நிலையில் கல்விப் பணிப்பாளரின் பிரதிநிதிகளாகக் கொழும்பு சென்றவர்கள் திரும்பிவரும் முன்னர் ஒரு ஆதார பூர்வமான அறிவித்தலை கல்விப் பணிப்பாளர் எவ்வாறு மறுக்க முடியும்? அவ்வாறு மறுப்பதன் மூலம் ஏற்படும் எதிர்மாறான விளைவுகளுக்கு கல்விப் பணிப்பாளரினால் என்ன பதில் கூறமுடியும்?

இன்று தமிழர் மீது கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் இன ஒடுக்கு முறையில் இருந்து தமிழ் மக்களைப் பாதுகாக்க ஒவ்வொரு தமிழ் அதிகாரிகளும் தம்மால் இயன்ற சகல வழிகளிலும் உதவ வேண்டும் என்பதே மக்களின் இன்றைய எதிர்பார்ப்பாகும் ஆனால் அதிகாரிகள் தமது விசேட உரிமைகளைப் பயன்படுத்தாமல்விட்டாலும் தமது கடமையையாவது பொறுப்புடன் செய்தால், கல்விப்பணிப்பாளரிடமிருந்து இராஜாங்க அமைச்சருக்குக் கிடைத்த பாராட்டுப் போன்று மக்களிடம் இருந்து கல்விப் பணிப்பாளருக்கும் கிடைக்கும் அல்லவா!

# "மீடியா" போர்வைக்குள் அமெரிக்க அசுரக் கோலம்

## யாழ்குடா நிருபரின் வளைகுடா நோக்கு

**லோகன்**

(நேற்றைய தொடர்ச்சி)

இது இவ்வாறு இருக்க சரியாக இரண்டு வருடங்களுக்கு முன்பு வடஅமெரிக்காவுக்கும், தென் அமெரிக்காவுக்கும் இடையில் இருக்கும் கால்வாய்க்குச் சொந்தமான நாடான பனாமாவின் மீது அமெரிக்கப்படைகள் ஒரு இராணுவ நடவடிக்கையை நடாத்தின. அங்கு ஆட்சியிலிருந்த இராணுவத் தலைவர் இமானுவல் நொறியேகாவை கைது செய்து அமெரிக்கா கொண்டு சென்ற பின் தமக்கு சாதகமானஒரு ஆட்சியாளரை அங்கு இருத்தின. இந்த இராணுவ நடவடிக்கையில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் பனாமாநகரத்திலிருந்து இராணுவ சாவடிக்கு மாற்றப்பட்டனர். ஏராளமானோர்சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு உயிர்கள் பறிக்கப்பட்டனர். இந்த சம்பவங்கள் நடைபெற்று ஒரு சில மாதத்தில் அமெரிக்காவின் தெரிந்தெடுக்கப்பட்ட பத்திரிகையாளர்கள் மட்டும் பனாமாவினுள் அனுமதிக்கப்பட்டனர்.

இந்த பனாமாக் கொலைகளுக்கு அமெரிக்க பாதுகாப்பு வட்டாரம் பென்டகன் விபரமளிக்கையில் பனாமாவில் மக்களைக் கொல்ல நாம் படைகளை அனுப்பவில்லை. போதை வஸ்து கடத்தல்காரர் நொறியேகாவை பிடிக்கவே அனுப்பினோம் இருந்தும் இராணுவ தாக்குதல்களின் இடையே அகப்பட்ட பொதுமக்கள் சிலர் உயிரிழந்திருக்கலாம். ஆனால் இந்த பொதுமக்கள் உயிரிழப்புகள் தியனமென் சதுக்கத்தில் சீனபடைகளால் கொல்லப்பட்டமாணவர்தொகையிலும் குறைவு எனவும் ருமேனியாவில் இரகசியப் பொலீசாரின் துப்பாக்கி வேட்டுக்கு இலக்காகி உயிரிழந்தோரின் எண்ணிக்கையிலும் குறைவானதே என அக்காலப்பகுதி உலக படுகொலைகளுடன் ஒப்பிட்டு காட்டப்பட்டது. இதனால் உலகின் தொலைத்தொடர்பு சாதனங்கள் சீனாவையும் இழந்து ஐரோப்பாவையும் நோக்கியே திரும்பியிருந்தன பனாமாப் படுகொலைகளனிப் பாரற்றுப் போயிற்று.

இறுதியாக இப்பொழுது வளைகுடா மீது அமெரிக்கா தனது இராணுவ நடவடிக்கையை நடாத்தி முடித்திருக்கிறது. ஒரு மாத காலத்துக்கும் மேலாக ஈராக் மீதும் குவைத் மீதும் விமானங்கள் குண்டு மழை பொழிந்தன. இந்த குண்டு வீச்சுகளின் போது அமெரிக்க B-52 விமானங்களின் திறமை புகழப்பட்டது. வானத்தில் பறந்து வரும் 'ஸ்கட்' ஏவுகணையை 'பெற்றியாட்' ஏவுகணை குறிதவறாது அடிக்கும் வித்தையை வரைபடங்கள் மூலமும் நேரடியாகவும், காட்டப்பட்டது அமெரிக்கப்படைகளின் மொட்டைத்தலைகள் ஒன்று சேர்ந்தால் எப்படியிருக்கும் என்று புகைப்படம் போட்டுக் காட்டப்பட்டது. பாக்தாத் இல் புதுவருடப் பிறப்பிற்கு மத்தாப்பு கொளுத்தி வாண வேடிக்கை காட்டுவதுபோல இரவு நேரக் குண்டு வீச்சும், கீழ இருந்து ஏவப்படும் விமான எதிர்ப்பு கணைகளும் காட்டப்பட்டது. இவை மட்டுமல்ல. அமெரிக்க "லேடி ஆமி" (பெண் இராணுவம்) போர்முனையில் துயிலும் அழகும், காலையில் எழுந்து பல் துலக்கி முகம் கழுவி உணவு உண்ணுவதும், உதட்டுச் சாயம் பூசி வாசனைத் திரவியங்கள் இட்டுக் கொள்வதையும் சி என் என் அறிக்கைகள் உலகெங்கும் ஒலிபரப்பின. வளைகுடா யுத்தகாலத்தின் சுவாரஸ்யங்கள் எம்மை எல்லாம் மகிழ்வூட்டின ஆனால் இந்த சுவாரஸ்யங்களின் மத்தியில் பெப்ரவரி மாதம் 13 ஆம் திகதி ஈராக்கின் பொதுமக்கள் பதுங்குகுழி மீது லேசர் கதிர் குண்டுகள் Laser Beam Bombs மூலம் நடாத்திய தாக்குதலில் எழுநூற்றுக்கும் அதிகமான பொதுமக்கள் பலியாகிய விடயம் வளைகுடாவின் எண்ணெய்ப்புகைக்குள்மறைந்து போய்விட்டதுபோல் ஆகப்பட்டுவிட்டது. இவ்வாறு ஒவ்வொரு குண்டுக்கும் பொதுமக்கள் அழிவு ஏற்பட்டது என்பதை வெளிக்காட்டாது தனதுகாரியத்தைச் சாதிக்கும் வரையில் உலகை ஏமாற்றும் தந்திரத்தை இப்பொழுது பென்டகன் கடைப்பிடிக்கிறது.

சதிப்புரட்சி மூலமாகவோ நேரடி இராணுவ நடவடிக்கைகள் மூலமாகவோ பிராந்திய நாடுகளில் உள்ள சுதந்திர அரசுகளை படுகுழியில் வீழ்த்தி அங்குவாழும் பொதுமக்களை அழித்து வருவதுடன் இந்த கொலை வெறி தாண்டவத்தின் கோரம் வெளியே தெரியாத வகையிலும் தனது காரியம் கச்சிதமாக முடியும் வரையிலும் உலகின் கவனத்தை வேறு திசையில் திருப்பிவிடும் தந்திரத்தை இப்பொழுது பென்டகன் கற்றிருக்கிறது.

இதன் பலனாக தனது யுத்த கப்பல்களின் படைபலம், விமானங்களின் சக்தி, தாக்கு திறன்கள் ஏவுகணைகளின் பாய்ச்சல் எல்லைகள் என்பவை உட்பட வேறு பல்வேறு போருக்கு பயன்படும் போரில் நடைபெறும் விடயங்களை காட்டிக்கொண்டு இந்நடவடிக்கைகளில் ஏற்படும் தாக்கத்தை சிந்திக்க முடியாத வகையில் உலகின் செய்தி தொலை தொடர்பு சாதனங்களை அமெரிக்காபயன்படுத்தி வருகிறது.

அதாவது ஒரு தாய் தனது பிள்ளைகளை பராக்காட்டி விட்டு தனது காரியத்தை சாதிப்பதைப்போல அமெரிக்கா 'மாஸ்மீடியா'' மூலம் உலகை பராக்காட்டி விட்டு தனது நலன் பேணும் நடவடிக்கைகளை கச்சிதமாகச் செய்து முடிக்கிறது.

இந்தப் புதிய யுக்தி கையாளப்பட்டு வரும் போதிலும் என்றோ ஒருநாள் கொலைகளின் புள்ளிவிபரங்கள் வெளிவரத்தான் செய்யும் என்பது அமெரிக்காவுக்குத் தெரியும். அதேபோல இந்த புள்ளிவிபரங்கள் என்றோ நடந்து முடிந்த கொலைகளின் புள்ளிவிபரங்களாகவே இருக்கும் என்பதுவும் பென்டகனுக்கும் அமெரிக்காவுக்கும் நன்கு தெரியும்.

(முற்றும்)

# மருந்தின்மையால் நோயாளர் ஒட்டுசுட்டானில் அவதி

(மாங்குளம்)

மாங்குளம் ஒட்டுசுட்டான் அரசினர் வைத்திய சாலையில் மருந்துவகைகள் இல்லாததினால் பெருந்தொகையான நோயாளிகள் நோயினால் அவஸ்தைப் படுகின்றனர்.

இப்பகுதிகளில் வேகமாக பரவிவரும் மலேரியா, மூளைக் காய்ச்சல் நோய்களினால் பீடிக்கப்பட்ட நோயாளிகள் உரிய மருந்துவகைகள் இல்லாததினால் நோயைக் குணப்படுத்த முடியாத நிலையில் அவதியுறுகின்றனர். (82)

# விண்ணப்பப்படிவங்கள் தீர்ந்துவிடும் நிலையில்

யாழ் செயலகத்தில் பிறப்பு இறப்பு அத்தாட்சிப் பத்திரம் எழுதும் படிவங்கள் தற்போது தீர்ந்துபோய் விட்டன.

இப்பத்திரங்கள் தீர்ந்துவிட்டதால் ஆயிரக்கணக்கில் ஏற்கனவே தேங்கியிருக்கும் விண்ணப்பங்கள் பதிய முடியாத நிலை ஏற்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதமளவில்கப்பல் மூலம் கொண்டு வரப்பட்ட இப் படிவங்களுக்கு ஏற்கனவே பற்றாக் குறை இருந்து வந்தது குறிப்பிடத் தக்கதாகும். (லோ)

# கல்வி டிப்ளோமா

(கொழும்பு)

பட்டப்பின கல்வி டிப்ளோமா பாடநெறியின் 1991-1992 கல்வி ஆண்டிற்கான (தமிழ்மொழிமூலம்) விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் இம்மாதம் 28 ஆம் திகதி அல்லது அதற்கு முன் மகரகம தேசியகல்விநிறுவனத்திற்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்

இப்பாடநெறி திருக்கோணமலை, வவுனியா, சாவகச்சேரி, மட்டக்களப்பு ஆகிய பிராந்திய நிலையங்களில் நடாத்தப்படும். கொழும்பு, காலி, கண்டி நகரங்களிலும் இப்பாடநெறி நடாத்தப்படும்.

# தமிழ் இன வளர்ச்சிக்கு மொழி வளர்ச்சி அவசியம்

தமிழ் இன வளர்ச்சிக்கு மொழிவளர்ச்சி அவசியம். ஒவ்வொரு தமிழ் மாணவனும் தனது அன்னை மொழியை நேசிக்க வேண்டும். தமிழ் மொழியின் மேம்பாட்டுக்கு அழகு படுத்த புதுப் புது இலங்கியங்களை நீங்கள் படைக்க வேண்டும் அதற்குத் தமிழ்த் தின விழா உந்துகோலாக அமையட்டும். இவ்வாறு கனகரத்தினம் மகா வித்தியாலயத்தில் தமிழ்த்தின விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கோட்டக்கல்வி அதிகாரி திருமதி சரோஜினி கல்யாணசுந்தரேஸ்வரன் குறிப்பிட்டார்.

பல கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்ற இந்த விழாவில் சத்தியவான் சாவித்திரி நாடகத்தில் இயமன் பாத்திரம் தாங்கிச் சிறப்பாக நடித்த மாணவன் பகீரதனைப் பாராட்டிய கல்வி அதிகாரி, அவருக்குத் தம் சார்பில்பொற்கிழி வழங்கி கௌரவித்ததையும் இங்கு குறிப்பிடத் தக்கது

# ஜெருசலேத்தில் ஜேம்ஸ் பேகர்

# பாலஸ்தீனத் தலைவர்கள் சந்திப்பு

(ஜெருசலேம்)

ஜெருசலேம் சென்ற அமெரிக்க வெளியுறவுச் செயலாளர் ஜேம்ஸ் பேகர் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசத்திலுள்ள பத்து பாலஸ்தீன அரசியல் தலைவர்களைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளார். இதேவேளை ஜேம்ஸ் பேகருக்கும் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களைச் சேர்ந்த பாலஸ்தீனியர்களுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் சாதகமான முறையில் நடைபெற்று வருவதாகப் பாலஸ்தீனிய விடுதலை இயக்கம் நேற்றுமுன்தினம் அறிவித்துள்ளது.

இதற்கிடையில் ஜேம்ஸ் பேகர் இஸ்ரேலுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை முடித்துக்கொண்டு சிரியா சென்றுள்ளார். வளைகுடாவில் சமாதானத்தை நிலைநாட்டும்பொருட்டு அராபியர்களும் யூதர்களும் புதிய கண்ணோட்டத்தில் சிந்திக்கவேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

பாலஸ்தீனிய விடுதலை ஸ்தாபனம் தனது பல்லாண்டுகால எதிர்ப்பைக் கைவிட்டு, ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த பாலஸ்தீனியத் தலைவர்கள், அமெரிக்க வெளிநாட்டு அமைச்சர் ஜேம்ஸ்பேகரை ஜெருசலேத்தில் சந்திக்க அனுமதித்ததன் மூலம் ஒரு வரலாறு படைக்கப்பட்டது. இதனை ஒரு புதிய நாள் எனக் குறிப்பிட்ட ஜேம்ஸ்பேகர் சகலரும் சற்றுத் தாராளமாக நடந்து கொள்வார்கள் என்று தெரிவித்தார்.

★ ஒரு பாலஸ்தீனிய அரசை உருவாக்குதல்;

★ ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசத்தில் சமாதானப்பேச்சுவார்த்தைகள் நடாத்த இஸ்ரேலைக் கோரும் ஐ. நா.சபையின் தீர்மானங்களை அமுல் செய்தல், கிழக்கு ஜெருசலேம் இஸ்ரேலுடன் இணைக்கப்பட்டதையும், யூதக் குடியேற்றங்களையும் நிறுத்துதல், அரபு-இஸ்ரேலிய சமாதானத்தை எய்துவதற்கு சர்வதேச மாநாடொன்றைப் பயன்படுத்துதல், அதில் ஒரே பிரதிநிதியாகப் பாலஸ்தீனிய விடுதலை ஸ்தாபனத்தை அங்கீகரித்தல் என்பனவே பாலஸ்தீனியத் தலைவர்கள் முன்வைத்த கோரிக்கைகளாகும்.

## லெப். குலம் பொது அறிவுப் போட்டி

(சுழிபுரம்)

1988 ஆம் ஆண்டு வீர மரணமடைந்த லெப். குலம் (முரளி கிருஷ்ணா) என்ற போராளியின் மூன்றாம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி நடாத்தப்பட்ட பொது அறிவுப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்கள் இன்றைய தினம் வழங்கப்படும்.

மேற்படி நினைவுதினத்தை ஒட்டி சுழிபுரம் மேற்கு பாரதி கலைமன்றத்தினால் மாணவர்கள் மத்தியில் இந்தப் பொது அறிவுப்போட்டிகள் நடாத்தப்பட்டது. (க)

## மோசடிக் குற்றத்திற்காக அகிலனுக்கு மரண தண்டனை

(செ. த மை.)

பணமோசடி செய்த குற்றத்துக்காக 'அகிலன்' என்ற இயக்கப் பெயருடையவருக்கு நேற்றுக்காலை விடுதலைப் புலிகளினால் மரணதண்டனை வழங்கப்பட்டது.

தீவுப்பகுதிப் பிரிவுக்காரியாலயத்தில் நிதிப்பொறுப்பாக இருந்த இவர் இயக்கத்துக்கு சொந்தமான பணத்தைக் கையாடிக்கொண்டு சென்றபோது மன்னாரில் வைத்து விடுதலைப் புலிகளினால் கைதுசெய்யப்பட்டதாகவும் விசாரணையின் பின் நேற்றுக்காலை வேலணையில் வைத்து இவருக்கு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## போட்டிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

இலங்கை நிர்வாக கல்வி சேவை மூன்றாம் வகுப்பு பதவி அணியினருக்குரிய போட்டிப் பரீட்சை ஏப்பிரல் மாதம் இருபத்தி ஏழாம் திகதி நடைபெற உள்ளது. இந்த பரீட்சைக்கான விண்ணப்ப முடிவு திகதி மார்ச் மாதம் இருபத்தைந்தாகும்.

மேலதிக விபரங்களுக்கு மார்ச் மாதம் எட்டாம் திகதி வர்த்தமானியை பார்வையிட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

## யுத்த இடர் காப்புறுதி அறவிடுதல் நிறுத்தம்

(கொழும்பு)

மத்திய கிழக்கிற்கான விமானச் சேவைகள் அனைத்தும் பயணிகளிடம் யுத்த இடர் காப்புறுதிப் பணம் அறவிடுவதைக் கைவிட்டுள்ளது. கட்டுநாயக்காவிலிருந்து பாரசீக வளைகுடா நாடுகளுக்கும் பயணம் செய்பவர்கள் மேலதிகக் காப்புறுதிப் பணமாக 1200 செலுத்திவந்தனர். செப்ரெம்பர் 1ஆம் திகதிமுதல் இப்பணம் அறவிடப் பட்டது. வளைகுடாவில் ஏற்பட்ட யுத்த ஓய்வைத் தொடர்ந்து இப்பணம் அறவிடுவது நிறுத்தப்பட்டுள்ளது.

தொய்வுநோய்

பிரிவில் இந்த ஊசி மருந்து ஏற்றப்பட்ட இருவர் இறந்ததைத் தொடர்ந்தே இந்தத் தடை போடப்பட்டுள்ளது. இன்னொருவர் இந்த மருந்து ஏற்றியதும் கடுமையாக்கி அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதித்த பிறகு குணமாகியுள்ளார். நீண்டகாலம் தற்செய்யும் இந்த ஊசி பரிசோதனை ஊசியின் பின்பு தான் போடப்பட்டது.

போர்த்துக்கல் தயாரிப்பான இந்த ஊசிமருந்து வெள்ளை நிறமான தூள்களைக் கொண்டது. சுத்திகரிக்கப்பட்ட (டிஸ்ரில் வாட்டர்) நீருடன் கலந்து நோயாளிகளுக்கு ஏற்றப்படுகிறது. இப்போது பாவனையில் உள்ள மருந்து மஞ்சள்நிறமான தூள்களைக் கொண்டதாம்.

கொழும்பிலும் வெளியிடங்களிலும் தனியார் மருந்துவமனைகளில் இந்த ரக மருந்துகள் இருப்பதாகவும், இவற்றைப் பாவிப்பதைத் தவிர்க்கும்படியும் மருத்துவ நிபுணர்கள் மருத்துவ மனைகளை எச்சரித்துள்ளனர்.

சந்திரசேகரின்

டகால நோக்கு இல்லை என்றும் அவர் குற்றம் சாட்டினார். கடந்த தேர்தல் நடந்து முடிந்ததுமே காங்கிரஸ் கட்சி முறிந்து சிதைந்து விடுமென எதிர்பார்த்தவர்களுக்கு பதிலடி கொடுக்கும் விதமாக காங்கிரஸ் ஒற்றுமையோடு எழுந்து நிற்கிறது என்றும் ராஜீவ் காந்தி தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அந்நியர்

பதி சங்கர் தயாள் சர்மா கேட்டுள்ளார்.

மொரிசியஸின் 23 ஆவது சுதந்திரதின வைபவத்தில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட சங்கர் தயாள் சர்மா இந்த வேண்டுகோளை விடுத்தார்.

மக்கள் அவை

பெரும்பான்மை பலத்துடன் மீண்டும் காங்கிரஸ் ஆட்சி வரும்என்று காங்கிரஸ் கட்சித் தலைவர் ராஜீவ்காந்தி நாடாளுமன்றக் கலைப்பையடுத்து செய்தியாளரிடம் பேசுகையில் கூறினார்.

இடைத் தேர்தல் நடத்த நிர்ப்பந்தித்தவர்களுக்கு மக்கள் நிச்சயம் பாடம் புகட்டுவார்கள் என்று துணைப் பிரதமர் திரு. தேவிலால் கூறினார்.

மக்கள் அவையைக் கவனிக்கும் குடியரசுத் தலைவரின் முடிவினால் நாடு நிம்மதிப் பெருமூச்சு விடுகின்றது இவ்வாறு பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் முரளி மனோகர் ஜோஷி சென்னையில் செய்தியாளரிடம் பேசுகையில் கூறியுள்ளார்.

மக்களவைக் கலைப்பினால் ஜனநாயகம் பாதிக்கப்படும் என்றும், நாட்டின் பொருளாதாரம் குன்றிப் போய்விடும் என்றும் ஜனதா தள் (எஸ்) கட்சித் தலைவர்களில் ஒருவரான சாந்தராம் கூறியுள்ளார்.

இடதுசாரிக் கட்சிகளும் நாடாளுமன்றக் கலைப்பை வரவேற்றுள்ளன.

இவ்வளவு பதட்டமும், பரபரப்பும் இல்லாமலும் யூகங்களுக்கு இடம் வைக்காமலும், அரசியல் கட்சிகளின் வியூகங்களுக்கு வழி சமைக்காமலும், சுமுகமாக செய்திருக்க வேண்டிய காரியம் தாமதமாக எடுக்கப்பட்ட முடிவே யானாலும் வேறுவழி இல்லாமல் எடுக்கப்பட்ட வரவேற்கத்தக்க முடிவாகும் என்று கூறினார். தி. மு. க. தலைவரும் முன்னாள் முதல்வருமான திரு. மு. கருணாநிதி

முன்னேற

கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே கடும் மோதல் ஏற்பட்டது மோதல் ஒருமணித்தியாலயத்திற்குமேல் நீடித்தது.

சிறிலங்கா இராணுவத்தினருக்கு உதவியாக மரக்காரம்பளையை நோக்கிக் குண்டு வீச்சு விமானங்கள் விமானத் தாக்குதலை மேற்கொண்டதுடன், முகாமில் இருந்து ஆட்லறி ஷெல்தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டது.

விடுதலைப் புலிகளின் எதிர்த் தாக்குதலைத்தொடர்ந்து இராணுவத்தினர் பலத்த இழப்புக்களுடன் பின்வாங்கிச் சென்றனர். சேதஎண்ணிக்கை விபரம் தெரியவில்லை. இராணுவத்தினர் பின்வாங்கிச் செல்லும்போது வவுனியா புதுவீதியிலுள்ள நான்கு வீடுகளைத் தீயிட்டுக் கொளுத்தியுள்ளனர்.

இந்திய

யும் ஆட்சி அமைக்க உரிமை கோராததாலும் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக ராஷ்டிரபதி அறிக்கை கூறியது.

மேலும் தேவைப்பட்டதான எல்லா பட்ஜட் சார்ந்த நடவடிக்கைகளையும், சட்டம் இயற்றுவதான நடவடிக்கைகளையும பாராளுமன்றத்தின் இரு சபைகளும் ஆமோதித்து நிறைவேற்றியபின்னரே லோக்சபா கலைக்கப்படுவதான பிரகடனம் வெளியிடப்பட்டுள்ளது.

மறுமலர்ச்சி

மன்று தனது பதினொராவது நிறைவுநாளைக் கொண்டாடுகின்றது. இதனையொட்டி சனிக்கிழமையன்று பிற்பகல் இரண்டு மணிக்கு கைலாசபதி கலையரங்கில் விழாவொன்று நடாத்தப்படவுள்ளது.

## அமெரிக்க அணுவாயுதத்தை மேற்பார்வையிட

# எம்மை அனுமதித்தாலே நாம் அனுமதிப்போம்

## வடகொரியா அறிவிப்பு

(பியொன்யங்)

தென்கொரியாவில் அமெரிக்கா வைத்துள்ள அணுவாயுதங்களைமேற்பார்வையிட அனுமதிக்காவிடில்தனது அணுசக்தி வசதிகளை சர்வதேச அணுசக்தி அமைப்பு மேற்பார்வையிட அனுமதிக்காது'' என வடகொரியா அறிவித்துள்ளது.

முன்னதாக வடகொரியாவில் உள்ள அணுசக்தி கொள்வனவு குறித்து பார்வையிட சர்வதேச அணுசக்தி அமைப்புஅனுமதி கோரியிருந்தது.

ஆனால் தென்கொரியாவில் உள்ள அமெரிக்க அணுவாயுதங்கள் தமக்கு அச்சுறுத்தலாக இருக்கின்றது என்றும் அதனை மேற்பார்வையிட அனுமதிக்காவிடில் தமது அணுவாயுத அமைப்புக்களையும் பார்வையிட சர்வதேச குழுக்களுக்கு அனுமதியளிக்கமாட்டோமென வடகொரிய அணுசக்தி நிலையம் அறிவித்துள்ளது.

## மறதியால் நகையைப் பறிகொடுத்த இளம் பெண்

(செ. த. மை)

வல்வெட்டித்துறை - வீதனை வீதியில் வசிக்கும் இந்திரமதி ஜெயக்குமார் (வயது 23) என்பவரின் 10 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளும், 8 ஆயிரம் ரூபா ரொக்கப் பணமும் திருடப்பட்டுள்ளதாகப் புகார் செய்துள்ளார்.

இவர் குளிப்பதற்காக அயல் வீட்டுக்காரரின் கிணற்றுக்குச் சென்றதாகவும், நகைகளையும், ரொக்கப்பணத்தையும் கிணற்றுக்குள் வைத்துவிட்டுக் குளித்து முடித்து மறந்துபோய் வீடு சென்றவர் திரும்பவும் வந்து பார்த்தபோது அவற்றைக் காணாமல் அதிர்ச்சி அடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது இச்சம்பவம் குறித்து பிரதேசப் பொறுப்பாளருக்கு புகார் செய்யப்பட்டுள்ளதாம்.

## உற்பத்தி ஊக்குவிப்பிற்கு பல்க. நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தின் வெவ்வேறு பிரிவுகளையும் சேர்ந்த அபிவிருத்திக்காக இருபது இலட்சம் ரூபாவுக்கும் மேல் செலவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இப் பணத்திலிருந்து செலவு செய்யப்பட்ட பகுதிகள் குறிப்பாக உள்ளூர் உற்பத்தி வளர்ச்சியை மையமாகக் கொண்டே செலவு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதில் மாற்றுசக்தி தயாரிப்பு பிரிவுக்கு இரண்டரை இலட்சம் ரூபாவும் விவசாய பீடத்தில் காளான் வளர்ப்பதற்கு இரண்டரை இலட்சம் ரூபாவும் சித்த ஆயுர்வேத பகுதிக்கு இரண்டரை இலட்சம் ரூபாவும் உயிரியல் தொழில்நுட்பத்திற்கு நான்கு இலட்சம் ரூபாவும் மேலும் கிளிநொச்சியில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட ஆடு மாடு கால்நடை வளர்ப்பு பகுதிக்கு பதினொரு இலட்சம் ரூபாவும் செலவுசெய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (வோ)

விசேட படி

தில் இருந்து வழங்கப்படவுள்ளது இதேவேளை பாடசாலைகளில்வழமையானபாட நேரத்துக்குப் புறம்பாகப் பிற்பகல் வேளையில் மேற்படிப் பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு மேலதிகமாகப் படி வழங்கும் சாத்தியம்பற்றியும் திறைசேரி ஆராய்ந்து வருகிறது.

## 22பல்கலைக்கழக கல்லூரிகள்

(கொழும்பு)

ஒன்பது மாகாணங்களிலும் ஒன்பது பல்கலைக்கழகங்களையும், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தலா ஒவ்வொன்றாக 22 பல்கலைக்கழகக் கல்லூரிகளையும் திறக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளதாகத் தெரிகின்றது. அடுத்த கல்வி ஆண்டிலிருந்து இத்திட்டம் அமுலாகலாமென கொழும்பில அரசாங்க அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

## கொழும்பு அகதி முகாம்களில் மலசல கூடங்கள் பற்றாக்குறை

(கொழும்பு)

பம்பலப்பிட்டி மாணிக்கப் பிள்ளையார் கோயில் அகதி முகாமில் சுகாதார நிலை மோசமாகவுள்ளது. 1800 அகதிகள் கொண்ட இந்த முகாமில் எட்டு மலசல கூடங்கள் உள்ளன இதேவேளை சரஸ்வதி மண்டபம் அகதி முகாமில் நான்கு மலசல கூடங்கள்தான் உள்ளன. இங்கு ஆகக் குறைந்தது இரண்டு மலசல கூடங்களாவது மேலதிகமாக இருக்க வேண்டுமாம்.

ஒருவர்

என்பவரும் கட்டுமரத்தில் மீன் பிடிக்கச் சென்றதாகவும், அந்தச் சமயம் கடற்படைப் படகின் சத்தம்கேட்டு இருவரும் கடலுக்குள் பாய்ந்ததாகவும் இதில் கண்ணன் என்பவர் நேற்று (புதன்) காலை 7 மணியளவில் கரைசேர்ந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. மற்றவரின் நிலை தெரியாது உறவினர்கள் கடற்கரையில் சோகம் ததும்ப எதிர்பார்த்திருக்கிறார்களாம். (15)

## மரணம்

தவறுதலாகக் கிணற்றுக்குள் விழுந்த சிறுமிமூச்சுத்திணறிப் பலியானார். மேற்படிசம்பவம் கிளிநொச்சியிலுள்ள வட்டக்கச்சி என்னுமிடத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றுள்ளது.

மேற்படி சம்பவத்தில் மரணமானவர் தீபபிரியா யோகநாதன் (வயது 4) என்ற சிறுமி ஆவார். (ச)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 14 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.